Registered as a News Paper  மக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

நல்லூர் ஒளி நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

## கொழும்பு அகதி முகாமில் புதியவர்களை சேர்க்கதடை

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்தோருக்கென கொழும்பில் இயங்கும் அகதி முகாம்களில் இனிமேல் புதிதாக எவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டாமென சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. டப்பலட்பிட்டி கோவில் விவேகானந்த சபைக் கட்டடம் ஆகியவற்றில் ஏற்கனவே தங்கியிருக்கும் அகதிகள் தொடர்ந்தும் அங்கு இருக்க அனுமதியளிக்கப்படுவர் என்றும், மேற்படி அகதி முகாம்களில் இனிமேல் வரும் புதியோரை ஏற்றுக் கொள்ளக் கூடாதென அகதி முகாம்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை வட-கிழக்கு இடம் பெயர்ந்த [4 ஆம் பக்கம் பார்க்க]

நாதம்:- 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  வைகாசி 28  (10 - 06 - 1992)  புதன்கிழமை  ஓசை: 113

# மூதூரில் புலிகளின் துணிகரத் தாக்குதல்

# அதிகாரி உட்பட 13 இராணுவத்தினர் பலி

## சிங்கள படையணி சிதறி ஓட்டம்

(மூதூர்)

மூதூரில் நேற்றுக்காலை சிறிலங்கா ராணுவரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். சுமார் 20 நிமிடங்கள் வரை நீடித்த இச் சண்டையில் அதிகாரி ஒருவர் உட்பட 13 இராணுவத்தினா கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றினர். விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் சிதறி ஓடினர்.

இம் மோதலில் ஏழு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்றுக்காலை மூதூர் பகிந்தபுர இராணுவ முகாமிலிருந்து அரிப்புச் சந்திக்கு ரோந்து வந்த இராணுவ அணியே தாக்குதலுக்கு உள்ளானது. சுமார் 40 பேர்களைக் கொண்ட இந்த இராணுவ அணி முகாமிலிருந்து புறப்பட்டு அரிப்புச் சந்திக்கு வந்து சேர்ந்த போதே இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டது. 7-10 மணியளவில் ஆரம்பமான இச்சண்டை சுமார் 20 நிமிடங்கள் வரை நடைபெற்றது இறுதியில் புலிகளின் உக்கிர தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் சிதறி ஓடியது.

## மன்னாரில் புலிகள் அதிரடி

## 4 படை பலி: பலர் காயம்

(மன்னார்)

மன்னார் சிறுநாவற்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை 7-00 மணியளவில் சிறுநாவற்குளம் இராணுவ முகாமிலிருந்து 25க்கு மேற்பட்ட இராணுவத்தினர் முருங்கன் வீதி வழியாக துப்பரவு செய்தவாறு வந்து கொண்டிருந்தனர் இவர்கள் மீது முகாமிலிருந்து 150 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

ஐந்து நிமிடம் இடம்பெற்ற இவ் அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் முகாமிற்குத் தப்பியோடிவிட்டனர்.

இவர்களிடமிருந்து பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவத்தினருக்கு உதவியாக இராணுவ முகாமிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் துணிகரத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர்.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னாரில் நேற்று இடம் பெற்ற அதிரடி தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

★ தலைக்கவசம் -02
★ மார்புக்கவசம் -01
★ தண்ணீர் கான் -01

பெற்ற அதிரடி தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

★ ஏ. கே. எல். எம். ஜி -01
★ ஏ. கே. எல். எம். ஜி ரம் மகசின் -08
★ ரி-56-2 ரக துப்பாக்கி -01
★ ரி-56-1 ரக துப்பாக்கி -01
★ ரி-56 மகசின் -08
★ ரி-81 மகசின் -01
★ நடுத்தர ரவைகள் லிங்குடன் -671
★ நடுத்தர ரவைகள் -234
★ ஜி ஆர் கைக்குண்டு -06
★ ஏ.கே.கோல்சர் -02
★ இடபாக் -02
★ சப்பாத்து -01 சோடி
★ மழைக்கவசம் -01
★ தண்ணீர் கான் -01

யோரி காயங்களுடன் முகாமிற்குத்தப்பியோடிவிட்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

# கைப்பற்றிய ஆயுதங்கள்

நேற்று திருக்கோணமலை மாவட்டம் அரிடபுச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

★ ரி-56-2 ரக துப்பாக்கிகள் - 04
★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் - 05
★ ரி-81-02 ரக துப்பாக்கிகள் - 02
★ ரி-56 மகசின் - 30
★ ரி-81 மகசின் - 09
★ நடுத்தர ரவைகள் - 1371
★ ஜே.ஆர் கைக்குண்டு - 01
★ ஏ.கே. கோல்சர் - 10
★ மைன்ஸ் கிண்டி - 01
★ ஓயில் கான் - 01
★ தொப்பி - 01
★ தலைக்கவசம் - 02
★ சப்பாத்து - 05 சோடி
★ மிலிரி பெல்ட் - 06

# 7 போராளிகள் வீரச்சாவு

திருக்கோணமலை மாவட்டம் அரிப்புச்சந்தியில் 09-06-1992 அன்று சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஒரு அதிகாரி உட்பட 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஏழு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். வீரச்சாவு அடைந்த மேஜர் வெற்றிச்செல்வன் (மெரில்ல - அழகையா சோமஜேஸ்வரன் 3ஆம் கொலனி, கிளிவெட்டி மூதூர்), லெப்டினன்ட் மலையமான் (நந்தி - தேவதாசன் கங்காதரன் 3ஆம் வட்டாரம் சால்பல்தீவு), லெப்டினன்ட் அறிவுநம்பி (குணா - உருத்திரமூர்த்தி சிறிகுமார், இல. 53, சிவன் வீதி, திருக்கோணமலை) லெப்டினன்ட் தர்மராஜ் (ஜோசப் அன்ரனீஸ் அலெக்சாண்டர், 11/12 மின்சார நிலைய வீதி, திருக்கோணமலை), 2ஆம் லெப்டினன்ட் மறைமலை (விவேகன் - இராஜப்பு அன்ரனி, ஆலங்கேணி திருக்கோணமலை), 2 ஆம் லெப்டினன்ட் மணிமொழி (ரங்கன் - வல்லிபுரம் கமலதேவன், திரியாய், திருக்கோணமலை) வீரவேங்கை திருவருட்செல்வன் (காளிதாஸ் வைரமுத்து கோணேஸ்வரன் 8 ஆம் வட்டாரம் சம்பல்தீவு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஊரடங்கு

[கொழும்பு]

வவுனியா மாவட்டம், மன்னார்த்தீவு, யாழ் குடாநாட்டின் தீவுகள் தவிர்ந்த வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இன்று காலை 8 மணி முதல் ஊரடங்கு அமுல்செய்யப்படும் என சிறிலங்கா கூட்டுப்படைகள் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

# 3 வேங்கைகள் வீரச்சாவு

மேஜர் ரவிசங்கர்



லெப். அரவிந்தன்



2ம் லெப் .உதயசந்திரன்



(மன்னார்)

09 06 1992 அன்று மன்னார் சிறுநாவற்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவ் அதிரடித் தாக்குதலில்

மேஜர் ரவிசங்கர் [யூலியஸ் வினசன் கெனடி புதிய வீட்டுத்திட்டம் தாழ்வுபாடு வீதி மன்னார்], லெப்டினன்ட் அரவிந்தன் [சீவதநாயகம் பிரான்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முன்னேற்ற முயற்சி புலிகளால் முறியடிப்பு

# அலம்பிலுக்கு இராணுவம் பின்வாங்கியது

## 4 மணிநேர மோதலில் 7க்குமேற்பட்ட படைபலி

[முல்லைத்தீவு]

அலம்பிலிலிருந்து குமுழமுனைக்கு முன்னேறிச் செல்ல முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப் புலிகளின் பாரி தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டது.

அலம்பிலிலிருந்து முன்னேறி தங்கபுரத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன் தினம் காலை 7 00 மணியளவில் கனரக வாகனங்கள் சகிதம் குமுழமுனை நோக்கி முன்னேற முயன்றனர். இவர்களுக்கு உதவியாக இரண்டு சுப்பசோனிக் விமானங்கள், இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் ஒரு அவ்ரோ, இரண்டு உலங்குவானூர்திகள் என்பன கடும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

முன்னேற முயன்ற இராணுவத்தினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை மேற் கொண்டனர். கனரக வாகனங்கள் மீது விடுதலைப் புலிகளால் ரொக்கட் தாக்குதல்களும் நடத்தப்பட்டது. இத்தாக்குதல்கள் பகல் 11.00 மணிவரை நீடித்தது.

விடுதலைப் புலிகளின் உக்கிரமான தாக்குதலால் முன்னேற முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்து பின்வாங்கி அலம்பில் பகுதியில் நிலைகொண்டுள்ளனர்.

இம் மோதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரண்டு இராணுவத்தினர் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## 5 புலிகள் வீரச்சாவு

08. 06. 1992 அன்று அலம்பில் பகுதியிலிருந்து குமுழமுனை நோக்கி 02 சுப்பர்சொனிக் விமானங்கள், 02 குண்டு வீச்சு விமானங்கள், ஒரு அவ்ரோ விமானம், 02 உலங்குவானூர்திகள் உதவியுடன் பெருமெடுப்பில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தி அவர்களைப் பின்வாங்கச் செய்தனர்.

இப்பாரிய தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்டகப்டன்நேசன் (தியாகலிங்கம் மோகன்பாபு 5ஆம் கட்டை, அலம்பில்). வீரவேங்கை ஜெயகரன் (இராஜலிங்கம் நவராஜ் கற்குடாவீதி மட்டக்களப்பு), வீரவேங்கை காதாம்பரி (திரேசாமலர்வில்பிரட், இல. 74 பளையபூங்கா வீதி, கண்டிக்குளி), வீரவேங்கை குயிலமொழி (ரசிதா வேலுப்பிள்ளை, பெரியமடு நெடுங்கேணி), வீரவேங்கை சந்திரமதி (புஸ்பராணி அரியராசா, கேப்பாபிளவு முள்ளியவளை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வீரச்சாவு



லெப்.வேந்தன்

08-06-92 அன்று அலம்பில் பகுதியில் சிறிலங்கா இராணு

(4ஆம் பக்கம் பார்க்க)

# பன்னிரெண்டுநாள் மோதலில்

# 110 இராணுவத்தினர் பலி

வடகிழக்குப் பகுதியில் கடந்த மே 28 முதல் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்துவரும் போரில் இதுவரை 110 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர் என்றும் இராணுவ தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

## வரி விளம்பரம்


### சங்கீதம்

சங்கீதம்விளாவிடை கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், தினேஷ், பாலாஜி, மண்டேலா, மாக்மிலன், ஞானசுரபி, ஆல்சிலோன், சோபிதா, அறிவாலயம், பிரசாந்தி, வாலாம்பிகா, ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், ஸ்ரீகாந்தி, ஸ்ரீகாந்தா, நடுவுத்துருத்தி. ( 2648 )

### உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆடும் அணிகள்: பாடும்மீன் (A) எதிர்த்து கிறின்பீல்ட் அணி மோதும். இவ் வாட்டம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் 10 - 06 - 1992 - 4. 00 மணிக்கு நடைபெறும். ( 2649 )

### தவறி விட்டது

அடையாள அட்டைமற்றும் சில சவுதிஅரேபியா தஸ்தாவேசுகள் அடங்கிய பணப்பை ஒன்று உரும்பராய்க்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையில் தவறி விட்டது. கண்டெடுப்போர் ஈழநாதம் காரியாலயம் அல்லது அறுசுவை உணவகத்தில் ஒப்படைக்கவும். ( சி/ 4526 )

### விற்பனைக்கு

Rotation Ridge Back நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. மகேந்திரன் நாக மாளிகை, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய், [2653]


# தமிழ் மக்களை இலகுவில் நாம் புறக்கணித்து விட முடியாது

## : அனுரா பண்டார நாயக்க

(கண்டி)

''சிறுபான்மை இனமக்களை இலகுவில் நாம் ஒதுக்கிவிட முடியாது; இனவாதம் பேசுவதை எமது கட்சி முழுமையாகக் கைவிடவேண்டும். தேர்தல்களின் வெற்றியை நிர்ணயிப்பதில் இவர்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். சிறுபான்மை இனமக்களின் பிரச்சினையை நாம் தட்டிக்கழிக்கவும் முடியாது.''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராகிய அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இக்கட்சியின் கண்டிமாவட்ட அமைப்பாளர்களின் கருத்தரங்கு ஒன்றில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் ஐ. தே. கட்சிக்கு கிடைத்த வாக்குகளைவிட கடுதலான வாக்குகளை எமது கட்சியின் ஆதரவில் நின்ற அபேட்சகர்கள் பெற்றார்கள் ஆகவே நாம் தமிழ் மக்களை புறக்கணித்து விட முடியாது விகிதாசார தேர்தல் முறை காரணமாகவே நாம் பாராளுமன்றம் சென்றோம் தொகுதிவாரியாக சென்றிருந்தால் பாதாளத்தில் வீழ்ந்திருப்போம் என்றும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்து இருபத்தைந்து வருட காலம் எதிர்க்கட்சியாகவே இருந்தாலும் அதுவும் ஒரு வரலாறாகி விடும் என்றும்,

இன்று நாம் தொடர்ந்து பதினைந்து வருட காலமாக எதிர்க்கட்சியாகவே இருந்து வருகிறோம் தென்கிழக்கு ஆசியாவிலேயே இது ஓர் வரலாறு ஆகும் என்றும் தெரிவித்தார்.

1960, 65, 70 களின் காலப் பகுதியில் எமது கட்சி இந்நாட்டை ஆட்சிபுரிந்தது மக்களுக்கு அன்று எமது கட்சியின் மீது இருந்த நம்பிக்கை காரணமாகவே நாம் ஆட்சிப்பீடம் ஏற வழி ஏற்பட்டது.

அன்று பண்டாரநாயக்கா அரசு மீது மக்கள் மிகுந்த பக்தி, கௌரவம் வைத்திருந்தனர். அதன் காரணமாக எமது கட்சித் தலைவர்களும் மக்களுடன் மிகுந்த அன்புடன் இருந்தார்கள்.

இந்த நாட்டின் அரசை ஏற்றி இறக்குவது பத்துமுதல் பன்னிரண்டு சதவீதம் வரையான மக்களே. இத்தகையோர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்லர். நாம் அவர்களை அணுகி அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் வாக்குகளைப் பெறலாம். அதனையே ஐ. தே. க. செய்கிறது. அதன் காரணமாகவே அது தொடர்ந்தும் வெற்றி பெறுகிறது. இத்தகைய மக்கள் எப்பொழுதும் பிரச்சினையைக் கண்டு அஞ்சுபவர்கள். அவர்கள்தான் அரசாங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் துணை நிற்கிறார்கள் என்றும் அனுரா தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## உடுகம் பொலவின்

# இடம் கண்டு பிடிக்கப்பட்டது: கைது செய்யப்படவில்லை

சர்ச்சைக்கு உரியவராகியிருக்கும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அவரது மறைவிடத்தில் காணப்பட்ட போதிலும் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை.

ஆயுதபாணிகளான பெருமளவு பொலிசார் அவரது மறைவிடத்தை இனங்கண்டுசூழ்ந்துகொண்ட போதிலும் முறையான பிடியாணையோ அல்லது கைது செய்வதற்கான உத்தரவோ அவர்களிடம் இருக்காமையினால் உடுகம்பொலவைக் கைது செய்ய இயலவில்லை எனப்பாதுகாப்பு வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

உடுகம்பொலவைக் கைது செய்வதற்கோ தடுத்து வைப்பதற்கோ திட்டவட்டமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலான நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்பதுடன் கைது செய்வதற்கான உத்தரவும் விடுக்கப்படவில்லை

# யாழ். விவசாயிகளுக்கு 'கெயர்ஸ்' நிறுவனம் உதவி

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட விவசாயி ... எந்த வழியில் எந்தத் தொகுதியில் உதவி வழங்குவது ...

# சார்ள்ஸுடன் டயானா மணமுறிவு

# ஐந்து முறை தற்கொலை முயற்சி

(லண்டன்)

முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸை திருமணம் செய்த பின் பிரிட்டின் இளவரசி டயானா ஐந்து தடவைகள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் என பிரிட்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகையான ''சண்டேரைம்ஸ்'' வெளியிட்டுள்ள தொடர் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''டயானா - அவரது உண்மையானகதை'' என்றதலைப்பில் அன்ரூமோட்டன் இக்கட்டுரையை எழுதி வருகிறார்.

இக்கட்டுரை வெளிவரமுன்னர் கட்டுரை ஆசிரியர் பிரிட்டிஸ் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். பரபரப்பான விளம்பரங்களின் பின் இக் கட்டுரை வெளிவரத் தொடங்கியுள்ளது.

இளவரசர் சார்ள்ஸ் உடன் ஏற்பட்ட விவாதத்தைத் தொடர்ந்து அரசகுடும்பத்தின் சான்றின்காம் என்னும் இடத்திலுள்ள கிராமப்புற இல்லத்தில் மாடியிலிருந்து குதித்தார் எனவும் 1980 களின் ஆரம்பத்தில் ஐந்து தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாரெனவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மணிக்கட்டுக்களை கத்தியால் வெட்டிக் கொண்டாரெனவும் கண்ணாடி அலுமாரி மீது மோதி தற்கொலை செய்து கொள்ள முயன்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இளவரசி டயானாவிற்கு இப்போது வயது 30 தன்னை விட 12 வயது அதிகமான இளவரசர் சார்ள்ஸை இவர் 10 வருடங்களுக்கு முன் மணமுடித்தார்.

மணவாழ்வில் வெகுவிரைவாக மணமுறிவு ஏற்பட்டது திருமண வாழ்வில் நிலைமை மோசமடைந்த போதும் அவற்றைச் சீர்திருத்திக் கொள்ள டயானாவிற்கு உதவி கிட்டவில்லை. இளவரசி டயானா தனக்கு ''ராணி'' பட்டம் கிடைக்கும் என நம்பவில்லை அவரது திருமண வாழ்வு பற்றிய உண்மைகள் அம்பலப்படுத்தப்பட்டதாலேயே சார்ஸ்சுக்கு மன்னர் பதவி வழங்கப்படாமல் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

சார்ள்சும் டயானாவும் விவாகரத்துச் செய்து கொண்டாலும் கூட ஆயிரம் வருட பழமைவாய்ந்த மன்னர் குடும்பத்தின் பெயர் தொடர்ந்து நிலைத்திருக்கும் என சண்டே டைம்ஸ் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பிலிருந்து தெரியவருகிறது.

எலிசபெத் மகாராணியின் மகள் இளவரசி ஆன் சிலவாரங்களுக்கு முன் விவாகரத்துச் செய்திருந்தார். மகாராணியின் இரண்டாவது மகன் அன்ரூ தனது மனைவியை விட்டு வாழ்கின்றார்.

1986 ஆம் ஆண்டு டயானா தூக்கமாத்திரைகளை அதிகமாக அருந்தினார் என்று டெயிலி மெயில் என்ற பத்திரிகை கடந்த வெள்ளியன்று செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்தே சண்டே டைம்ஸ் இத்தொடர் கட்டுரையை வெளியிடுகிறது.

# விமானம் வாங்குவது முடிவாகவில்லை

(டில்லி)

இந்திய விமானப் படைக்கு என நவீன ரக 'ஜெட்' பயிற்சி ...

## அணு ஆயுத பரம்பல் தடை

# அமெரிக்கா யோசனைக்கு இந்தியா எதிர்ப்பு

(டில்லி)

அணுவாயுதப் பரம்பலைத் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை தெற்காசிய நாடுகள் செய்து கொள்ளவேண்டும் என அமெரிக்கா தெரிவித்த யோசனையை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நிராகரித்துள்ளார்.

உலகளாவிய பிரச்சினை ஒன்றைப் பிராந்திய ரீதியாக அணுகுவது தோல்வியடையும் என்று அவர் கூறியுள்ளார்

இங்குள்ள பிரச்சினை இந்தியாவா அல்லது பாகிஸ்தானா அணுவாயுதத்தை உற்பத்தி செய்கின்றனவா அல்ல என்று, ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் ஆயுதங்கள் பற்றியது என்றும் பிரதமர் நரசிம்மராவ் மேலும் தெரிவித்துள்ளார்.

பல நாடுகள் ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கின்றன என்றும் அவை கைமாறக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் நரசிம்மராவ் தெரிவித்திருக்கிறார்.

## சட்ட விரோதமாக

# தொழில் செய்த அந்நியர் ஜப்பானில் கைது

(டோக்கியோ)

ஜப்பான் தனது நாட்டில் ... வெளிநாட்டவர்களில் தென் கொரியர்களே அதிகம் எனவும் ...

முகவரி: இ. மகேந்திரன் நாக மாளிகை, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். [2653]

எதிர்க்கட்சியாகவே இருந்து வருகிறோம் தென்கிழக்கு ஆசியாவிலேயே இது ஓர் வர

# சீன மீன்பிடி கப்பல்களை வெளியேற உத்தரவு

(கொழும்பு)

இரண்டு சீன மீன்பிடி ஆய்வுக் கப்பல்களை மன்னாரை அடுத்த சிறிலங்கா கடற் பிரதேசத்திலிருந்து வெளியேறும்படி சிறிலங்கா அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தப்படகுகள் இரண்டும் அனுமதி வழங்கப்படாத சிறிலங்கா கடற்பிராந்தியத்தில் ஆய்வில் ஈடுபட்டிருந்ததாக அரசவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா — சீனா உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த இரு படகுகளும் சிறிலங்காவின் கடல் மீன் வளம் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையிலான இந்த ஒரு வருட ஒப்பந்தம் இந்த வருட ஆரம்பத்தில் கைச்சாத்தாகியது. சீனப் படகுகள் ஆய்வின் போது பிடிக்கும் மீன்களில் ஒரு பகுதியை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு விற்கும்மிகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம்வழிவகை செய்கிறது

பாரிய சீன மீன்பிடிக் கப்பல்கள் மன்னார் கடலிலுள்ள மீன்களை பிடித்துவிடும்என்று அப்பகுதி மீனவர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.

கடலில் ஒதுக்கப்பட்ட இடத்தைவிட மன்னார் கரையோரமாக வேறு இடங்களில் இந்தப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டதாலேயே அரசுஇந்த உத்தரவைப் பிறப்பித்தது என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கொழும்பு பல்கலைக்கழகம்

# நான்கு மாணவர்களின் விடைத்தாள்கள் மறைவு

[கொழும்பு]

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நான்காம் ஆண்டுப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றியவர்களில் நான்கு பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழக செனேற் இந்த நான்கு மாணவர்களினது புள்ளிகளை எவ்வாறு வழங்குவது என்று திண்டாடுவதாகப் பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தனது பதவியைத் திடீரென்று ராஜினமாச் செய்து வெளிநாடு சென்றதற்கும், வினாத்தாள்கள் காணாமற் போனதற்கும் தொடர்பிருக்கிறதாக கூறப்படுகிறது.

துணைவேந்தர் குறிப்பிட்ட வினாத்தாள் பொதியை சமர்ப்பிக்கும்படி கேட்டபோது அந்தப்பொதி ஒரு வாரத்துக்குப் பின்பே அவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

துணைவேந்தர் கைக்குப் பொதி வந்ததும் குறிப்பிட்ட விரிவுரையாளரின் கடவுச்சீட்டை மீளப்பெறுவதற்கான நடவடிக்கையைத்துணைவேந்தர் மேற்கொண்டிருக்கிறார். அதற்கிடையில் குறிப்பிட்ட விரிவுரையாளர் வெளிநாடு சென்று விட்டார் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பரிசுத்தினம்**

காலம்: 11-06-1992 வியாழக்கிழமை காலை10மணி
இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
பிரதமவிருந்தினர்: திரு.க.பரமேஸ்வரன் அவர்கள்
பதிவாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.
பரிசில் வழங்கல்: திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர். முன்னாள் ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.)

யா. இ. க.
09-06-1992.
அதிபர், ஆசிரியர், மாணவர்
(சி/4525)


# 'கெயர்ஸ்' நிறுவனம் உதவி

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு அகில உலக கெயர் ஸ்தாபனம் விவசாய உபகரணங்களை வழங்கவுள்ளது. முன்னர் இரண்டு தடவைகளில் முப்பதாயிரம் விவசாயிகளுக்கு இத்தாபனம் எரிபொருள், நீர் இறைக்கும் இயந்திரம், தானிய வகைகளை வழங்கியது தெரிந்ததே. தற்போது மீண்டும் பதினையாயிரம் விவசாயிகளுக்கு இவர்கள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

இம்மூன்றாவது திட்டம் வகுக்கபபடுவதற்கான முன் நடவடிக்கைகளாக இவை எந்த வழியில் எந்தத் தொகுதியில் உதவி வழங்குவது என்பது பற்றி ஆராய்வது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்றுக் காலை யாழ் செயலகத்தில் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

## யாழ். இந்துவின் பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரிப் பரிசுத்தினம் நாளை காலை 10-00 மணியளவில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# ஊழலில் சம்பந்தப்பட்டோர் சொத்துக்கள் பறிமுதல்

(டில்லி)

பாதுகாப்பு முறைகேட்டு ஊழலில் சம்பந்தப்பட்டதாக குறிப்பிடப்பட்ட நபர்களின் சொத்துக்கள் சிறப்புநீதிமன்ற அவசர சட்டத்தின் கீழ் ஜப்தி செய்யப்பட்டுள்ளன.

அரசு தரப்பு,பொதுநிலைய பொறுப்பாளர் ஏ.கே.மேனன் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்ததுடன் ஏ. டி. நரோத்மன். கித்தேன் தலார் என்ற இரண்டு பங்குதரகர்களின் சொத்துக்களையும் ஜப்தி செய்வதற்கான உத்தரவையும் பிறப்பித்தார்.

இந்த அறிக்கையில் முப்பத்தியொரு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் இருபத்தியொன்பது ஹர்சத்மேத்தா மற்றும் அவரது குடும்பத்தினருடன் தொடர்புடையவை. ஹர்சத் மேத்தாவின் மூன்று சகோதரர்கள் அவரதுதுணைவியார் ஜோதி மேத்தாவும் இதில் அடங்குவர்.

# சிரோன்மணி விருது ஜெயலலிதாவிற்குகிடைக்கும்

(சென்னை)

பல்வேறு துறைகளிலும் சிறந்த சாதனைகள் புரிந்தமைக்காக வழங்கப்படும் ''சிரோன்மணி'' விருது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்ற ஆண்டின் சிறந்த பெண்மணியாக செல்வி.ஜெயலலிதாவை தெரிந்தெடுத்து அவருக்கு ''மகிமாசிரோன்மணி'' வழங்க புதுடில்லியிலுள்ள சிரோன்மணிநிறுவனம் முடிவு செய்துள்ளது.

இந்த விருதினை உபஜனாதிபதி சங்கர் தார்சஸ்மா இன்று புதுடில்லியில் வழங்கவுள்ளார்.

அலுவலக வேலை காரணமாக நேரடியாக இந்த விருதினை முதலமைச்சர் பெற முடியாத நிலையில் அவருக்கு பிரதிநிதியாக வேறொருவர் அதனைப் பெற்றுக் கொள்வார்.


## அறிவித்தல்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த பாலம் பொதுப்பணிமன்றம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் ஏதும் இருப்பின் 15-06-92 க்கு முன்னர் 83/2, காங்கேசன்துறைவீதி, கொக்குவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நேசன்
நிர்வாகி

10-06-92 (சி/4530)


...விமானம் வாங்குவது முடிவாகவில்லை

(டில்லி)

இந்திய விமானப் படைக்கு என நவீன ரக 'ஜெட்'பயிற்சி விமான மொன்றை வாங்குவது தொடர்பாய் இதுவரை எந்தவித முடிவும் மேற்கொள்ளப் படவில்லையென இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரான்சிய விமானங்கள் இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஆனால் இது விடயத்தில் பாதுகாப்பமைச்சகம் இன்னமும் முடிவு எடுக்க்வில்லை என்றும் தெரிவித்தார்.

# ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## - எகிப்திய ஜனாதிபதி முபாரக்

(கெய்ரோ)

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் விடுவிக்கப்படவேண்டுமென்று எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் அறைகூவல் விடுத்துள்ளார்.

கெய்ரோவில் உள்ள அரபுலீக் தலைமையகத்தில் ஜெருசலம்தினத்தைநினைவுகூருமமுகமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் ஹொஸ்னி முபாரக்கின் உரை வாசிக்கப்பட்டது.

புனித ஜெருசலம் நகரின் கிழக்குப் பகுதி இஸ்ரேலின் தலைநகராக என்றுமே ஆக முடியாது. கிழக்கு ஜெருசலத்தையும், ஏனைய பகுதிகளையும் எவ்வளவு காலஞ் சென்றாலும் சர்வதேச சமூகம் விடுவிக்க வேண்டும் என்றும்,

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னதாக 1967 இல் அரபு-இஸ்ரேல் யுத்தம் வெடித்த பின்னர் ஜெருசலத்தின் கிழக்குப்பகுதியையும் ஜோர்தான் மேற்குக்கரையையும் தாஸகவையும் இஸ்ரேல் கைப்பற்றியது. அன்றிலிருந்து ஜெருசலம் பழைய நகராக அது பிரகடனப்படுத்தியது என்றும்,

மற்றவர்களுக்குச் சொந்தமான பிரதேசங்களை பலாத்காரமாகக் கைப்பற்றுவது சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முரணானது என்றும்,

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக ஜெருசலத்தில் இஸ்ரேல் அதிகாரிகள் குடியேற்றங்களை ஏற்படுத்துவது தமது உறுதிமொழிகளை மீறும் செயலாகும் என்றும்,

அரபுக்கள் தமது உரிமையையோ அல்லது பிரதேசத்தின் ஒரு அங்குலத்தையோ விட்டுக்கொடுத்து தமது தேசிய உரிமைகளையும் இறைமையையும் பேரம்பேச உடன்படமாட்டார்கள் என்றும் தெளிவுபட அவர் தெரிவித்தார்.

# ...ஜப்பானில் கைது

(டோக்கியோ)

ஜப்பான் தனது நாட்டில் சட்ட விரோதமாக தொழில் புரியும் வெளிநாட்டவர்களை பெரும் எண்ணிக்கையில்கைது செய்துள்ளது.

1991ஆம் ஆண்டில்32,000க்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டதாக ஜப்பானிய நீதி அமைச்சு தெரிவித்துள்ளது இவர்களில் பெரும்பாலானவர்கள் நாடுகடத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஜப்பானில் வேலை செய்யும் வெளிநாட்டவர்களில் தென் கொரியர்களே அதிகம்எனவும் அதற்கு அடுத்தபடியாக ஈரானியர், மலேஷியர், தாய்லாந்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

1991 நவம்பர் மாதம் முதலாம் திகதி அளவில் 2,16,399 பேர் சட்ட விரோதமாக ஜப்பானில் குடியேறியுள்ளதாகவும் இது ஆறு மாதங்களுக்கு முன் இருந்த எண்ணிக்கையை விட 357 அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிளோட்டப் போட்டி

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பங்கு பற்றும் 35 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 10 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் இம் மாத இறுதிப்பகுதியில் நடத்தப்படவுள்ளது

இதற்கான ஒழுங்குகளை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அபிவிருத்திக் குழு மேற்கொண்டுவருகின்றது.(05)


## நினைவு கூருகின்றோம்...

**1992-06-10**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வைத்திய கலாநிதி.

1986 ஆம் ஆண்டு குருநகரிலிருந்து 'தூயஒளி' படகில் தொழிலுக்குச் சென்றபோது சிறிலங்கா கறுப்புச் சட்டை இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லபபட்ட 34 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

தமிழீழக் கடற்பரப்பிலிருந்து (வல்வெட்டித்துறை) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைப்பாறிய பாடசாலை அதிபர்.

1987 ஆம் ஆண்டு மயிலவெவப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

கப்டன ரமேஸ் (கனகசபை செல்வரட்ணம் - திரியாய், திருக்கோணமலை.)

1989 ஆம் ஆண்டு மந்திகை முகமாலைப் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட மாவடி வேம்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4527)

நல்லூர் ஜீ நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

அனுபவம் மெல்லவும், தவறுகளுக்கு ஈடாகவும் தான் படிப்பினை புகட்டும்
— ஜேம்ஸ் ஆந்தனி ஃபிரவுட்

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 10-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 95

# இருவருடப் போர்; கற்பித்த பாடம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்று வரும் 'தமிழீழத்தின் இரண்டாம் கட்டப் போர்' ஆரம்பமாகி இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. இடைவெளி எதுவுமின்றி தொடர்ந்து நடைபெற்றுவரும இப்போர் அண்மையில் ஓய்வதற்கான சமிக்ஞைகளும் தெரிவதாக இல்லை.

தமிழருக்கு எதிராக இப்போரை சிங்களப்பேரினவாத அரசாங்கம் பிரகடனப்படுத்தியபோது ஆறுமாத காலப் பகுதிக்குள் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அதாவது விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்றே திட்டமிட்டது. அன்றைய சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜெரெட்னா ''ஆறு மாத காலத்திற்குள் விடுதலைப் புலிகள் ஒழிக்கப்படுவார்கள்'' எனப் பிரகடனம் செய்தார்.

ஆனால் போராட்டம் இரண்டு வருடமாகியும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தற்போதைய இணைப் பாதுகாப்பு அமைச்சரும், பிரதமமந்திரியுமான டி. பி. விஜயதுங்கா இன்னும் இரண்டுமாத காலப் பகுதிக்குள் போருக்கு முடிவு ஏற்பட்டு விடும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இரண்டு ஆண்டு காலப்போரின் போது சிறிலங்கா இராணுவம் வீங்கிப் பெருத்துள்ளது போர் ஆரம்பித்தபோது சுமார் 45,000 ஆக இருந்த சிறிலங்கா இராணுவம் இன்று ஒரு லட்சத்தையும் தாண்டி விட்டது. அத்தோடு, சிறிலங்கா ஆயுதப் படையில் டாங்கிப் படைப் பிரிவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. விமானப்படை, கடற்படை என்பனவும் பல மடங்கு பெருகியுள்ளன. நவீன போர்த் தளபாடங்களைப் பெற்றுள்ளன. விமானப் படையில் சுப்பசொனிக் குண்டுவீச்சு ஜெட் விமானங்களும், கடற்படையில் அதிவேக ரோந்துப் படகுகளும் பெரும் பீரங்கிக் கப்பல்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு படைப்பலம் பெருகினும் இராணுவத்

# சாதனைகளும் சோதனைகளும் நிறைந்த இரண்டு ஆண்டுப் போர்

இரண்டாது ஈழப் போர் என்று அரசியல் ஆய்வாளர்களால் குறிப்பிடப்படும் சிங்கள சிறிலங்காப் படைகள் மீதான யுத்தம் ஆரம்பமாகி இரண்டாண்டுகள் பூர்த்தியடைகின்றன. இக்காலப்பகுதியில் பல சாதனைகள் படைக்கப்பட்டன. சோதனைகள் மிகுந்திருந்த போதிலும்உறுதியுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. பிரகடனப் படுத்தப்படாத பொருளாதாரத் தடை முதல் பல்வேறு சிரமங்களுக்கும் முகங்கொடுத்து விடுதலையை வென்றெடுக்க திடசித்தம் கொண்டவர்களாக தமிழ் மக்கள் மிளிர்ந்துள்ளனர். சிறிலங்காவின் சிங்களப் படையினரில் 6690பேர் கடந்த நான்கு ஆண்டுகளில் கொல்லப்பட்டனர் அல்லது நிரந்தர ஊனமடைந்தனர் எனப்பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் ஒப்புக்கொள்கின்றன இவர்களில் பெரும் பகுதியினர் தமிழ் மக்களின் தாயகப் பூமியை ஆக்கிரமிக்க வந்துதான் நிரந்தர ஊனமடைய அல்லது கொல்லப்பட நேர்ந்தது என்பது வெளிப்படை. சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு விரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டு தாயக விடியலுக்காக தம் இரத்தம் சொரிந்து காவியம் எழுதினர்.

காவலரண்கள் பலதகர்க்கப்பட்டன. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. உலங்கு வானூர்திகள் உட்பட இராணுவ வாகனங்கள் பல நாசமாக்கப்பட்டன. ஆர். சி. எல். என்னும் நவீன பீரங்கி ஐம்பது கலிபர் துப்பாக்கி உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன. சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழ்ப்பொது மக்களின் உயிரைக் குடித்து சிங்கள எதேச்சதிகார அரசு இனப்படுகொலை நிகழ்த்தியது. எனவே தான் சாதனைகள் மலிந்தும், சோதனைகள் மிகுந்தும் இருந்த கடந்த இரண்டாண்டு காலத்தையும் மீட்டுப் பார்ப்பது இங்கு பயன் பொருந்தமுடையதாகும்.

11-06-1990 இல்



புலிக்கொடி கம்பீரமாகப் பறக்கும் யாழ் கோட்டையின் கிழக்குப்புற வாயில்

(26-09-90)

கைப்பற்றினர்.

10-07-1990இல் வடமராட்சிக் கடலில் தரித்து நின்றுதமிழீழத்தின் மீது பீரங்கி வேட்டுக்களைப் பொழிந்து கொண்டிருந்த சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப்படகு கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டது. அதற்கு அடுத்தநாளான 11-07-199இல் கொக்காவிலில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நிலை குலைய கொக்காவில் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது இதன்பின்னர்107 நாட்களாக நீடித்த முற்றுகையை அடுத்து26-09-199இல யாழ்ப்பாண கோட்டையிலிருந்து சிறிலங்கா இராணுவத்

பகுதியாக மாற்றமடைந்தது டன் புலிக்கொடி கம்பீரமாக பறக்க வழியேற்பட்டது. தமிழீழத்தின் தேசியக்கொடி என்று மாவீரர் வாரத்தில் மக்களெல்லோரும்புலிக்கொடியை மகிழ்ச்சியுடன் ஏற்றியிருந்த மாவீரர் வாரத்தில் மாங்குளம் வெற்றி கொள்ளப்பட்டது ஒரு மகத்தான சாதனையாகும்.

இந்தநிலையில் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்கவும் சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை தொடங்கவும் விடுதலைபபுலிகள் விருமபினர். அதனைப் பகிரங்கமாக அறிவிக்கவும் செய்தனர் எனினும் விடுதலைப் புலிகள் நீட்டிய

கையாண்டன. ஒன்று பொருளாதாரத் தடைகளை தீவிரமாக்கியதன் மூலம் அப்பாவி மக்களின் அன்றாட வாழ்க்கையை கேள்விக்கு உள்ளாக்கியது. மறுபுறத்தில் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டது. முஸ்லிம் ஊர் காவற்படைகளுக்கும் ஏனைய துரோகக் கும்பல்களுக்கும் ஆயுதங்களை வழங்கியதுடன் சிங்களப் படைகளும் படுகொலைகளை நடத்தியது. தென் தமிழீழததில் இவை வேகமாக நடைபெற்றன. இவற்றிற்கு ஒரு உதாரணமாக கொக்கட்டிச் சோலைப் பகுதியில் ஒரே வேளையில் நூற்றிஅறுபது தமிழர்களைப் படுகொலை செய்த

இராணுவ முகாமைகளுக்கும் யுத்தம் 10-7-91 இல் ஆரம்பமாகியது. ஆகாய, கடல், தரை மார்க்கங்களில்முப்படைகளையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் சுமார் முப்பது நாட்களுக்கு மேலாக நடத்திய தீரம் மிக்க தாக்குதல் கப் வரலாற்றின் ஏடுகளில் முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாகப் பதியப்படும்.

இதன்பின்னர் 30-08-91இல் அடர்காட்டுப் பகுதியான மணலாறுப் பகுதியில் ஒரு யுத்தம் மூண்டது. சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக முயன்றும் முடியாத நிலையில் 27-9-91 இல் மணலாறுப் பகுதியில் இராணுவம் மூட்டை முடிச்சுக்களோடு பின்வாங்கியது. ஆனையிறவு யுத்தத்தின் பின்னர் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்ற கற்பனையோடும் தமிழரின் தாயகப் பகுதியை துண்டித்து விடும் திட்டத்தோடும் சிறிலங்கா இராணுவம் பெரும் எடுப்புகளோடு ஆரம்பித்த மணலாறுபபோர் இராணுவத்திற்குப் படுதோல்வியை ஏற்படுத்தியது.

''ஒபரேசன் வலம்புரி' என்னும் பெயரில் 1991ஒக்டோபரில் யாழ்பபாணக் குடாநாட்டைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தவும் ராணுவம்முற்பட்டது இதோயாழ்ப்பாணத்தின்மீது பெரும்படை எடுப்பு நடக்கப்போகிறது யாழ்ப்பாணத்தை பிடிக்கப்போகிறோம்... புலிகளை அழித்துவிடட்போகிறோம் என்று பெரும் பிரச்சாரங்களை முடுக்கி விட்ட சிறிலங்கா இராணுவம் திசைகெட்டுத் தடுமாறியது.

தலைவர்பிரபாகரன்வகுத்த புதியதந்திரோபாயங்கள்ராணுவத்திற்குப் பலத்த இழப்பை ஏற்படுத்தியதோடு இராணுவத்தினரின் மனநிலைகளையும் பாதித்தது இதன் விளைவாக புதிய ஆட்சேர்ப்புகள் புதிய பயிற்சிகள் என்பன நடத்தவேண்டிய நிலைக்கு இராணுவம் தள்ளப்பட்டது மின்னல் வேக திடீர் அதிரடித்தாக்குதல்கள் இராணுவத்தை நிலைகுலைய வைத்ததோடு அவர்கள் மனோநிலையும் சிதறடித்தது.

இதேவேளை மணலாற்றின்

இவ்வாறு படைப்பலம் பெருகினும் இராணுவத்தினரின் மனோ நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள் இராணுவத்தினரைத் திணறடித்துள்ளன. விடுதலைப் புலிகளின் மின்னல் வேக அதிரடித் தாக்குதல்கள் குறித்து இராணுவத் தரப்பினர் அங்கலாய்க்கின்றனர். புலிகளின் மனோபலம் குறித்தும், கட்டுப்பாடுகள் குறித்தும் வியக்கின்றனர்.

இந்நிலையில், புலிகளை அழித்துவிடுதல், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுதல் என்பன சாத்தியப்பாடானதொரு விடயம் அல்ல என்பதைச் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவத் தரப்பும் தற்பொழுது உணர்ந்துள்ளன. இதுவரை புலிகளை அழித்து விடுவோம் எனக் கூக்குரல் இட்டவர்கள் தற்பொழுது புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சுவார்த்தை அரங்கிற்கு கொண்டு வருவதே தமது நோக்கம் எனத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், புலிகளைப் பலவீனப் படுத்துவதோ, அன்றி பலவீனப்படுத்துவதன்மூலம் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவரவோ முடியாது என்பது சிறிலங்கா அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். விடுதலைப்புலிகளும் அதனை தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். இதே வேளை, யுத்தம் தொடங்கிய காலத்தில் இருந்து புலிகள் பேச்சுவார்த்தைக்கான கதவுகளைத் திறந்தே வைத்துள்ளனர். இராணுவ அழுத்தங்கள் போடப்பட்டால் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் மூடப்படும் என்பதும் புலிகளின் திட்டவட்டமான நிலைப்பாடாகும்.


அத்தோடு தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காணுமாறு பல மேற்கு நாடுகளும், மனித நேய ஸ்தாபனங்களும் தொடர்ந்தும் வற்புறுத்தி வந்தன, ஆனால் இவை யாவற்றையும் பொருட்படுத்தக்கூடிய நிலையில் சிறிலங்கா அரசு இருக்கவில்லை.

அதாவது கடந்த இரண்டு வருடப் போர் வழங்கிய படிப்பினையே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எதுவும் காண முடியாது, அரசியற் தீர்வே ஒரே வழி எனச் சிறிலங்கா அரசாங்கத்திற்கு புரிய வைத்துள்ளது. ஆனால், இன்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும், அவரது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும் எதிராக தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளும் பொருளாதார சமூகபிரச்சினைகளும் திரு. பிரேமதாசாவிற்கு தொடர்ந்து போரை நடத்துவதை அவசியமாக்கியுள்ளது. வெல்லமுடியாத யுத்தம் என்று தெரிந்தும், பெரும் பொருட் செலவுடனும் உயிரிழப்புடனும் போரை நடத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. இப்போர் மூலம், சிங்கள மக்களைத் திசை திருப்பி தனது அரசுக்கெதிரான சக்திகளை மழுங்கடிக்க அரசாங்கம் முயல்கின்றது. அதாவது பிரேமதாசா அரசாங்கம் உயிர் வாழ வெல்ல முடியாத யுத்தம் ஒன்றை தொடர்ந்து நடத்தி வருகிறது.

---

முடையதாகும்.

11-06-1990 இல் சிங்கள சிறிலங்காப் படைகளுடனான மோதல்கள் வெடித்த போதிலும் ஆரம்பத்தில் சமரசம் செய்ய எடுத்த முயற்சிகள் முன்ன மழுங்கிப் போன நிலையில் 15-06-90 இல் விடுதலைப் புலிகள் தொடர்ந்து போரிடுவது எனப் பிரகடனம் செய்தனர். இதன் விளைவாக தென் தமிழீழத்தில் வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையிலான பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவல் நிலையங்கள், படைமுகாம்கள் சுற்றிவளைப்புத் தாக்குதல்களுக்கு இலக்காகின 18-06-1990இல் யாழ் கோட்டை இராணுவ முகாம் மீதான முற்றுகை ஆரம்பமாயிற்று 21-06-1990இல் மன்னார் மாவட்டம் கொண்டச்சி என்னும் இடத்தில் சிங்களக் குடியேற்றக்காரர்களுக்கு பாதுகாப்பிற்கென நிறுவப்பட்டிருந்த இராணுவ முகாம் நிர்மூலமாக்கப்பட்டது. அங்கிருந்த இராணுவத்தினரில்பலர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் தப்பியோட 'பவள் கவச' வாகனம் உட்பட பெருந்தொகை ஆயுதங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள்



மணலாற்றுச் சண்டையில் கைப்பற்றப்பட்ட
106 மி. மீ. எம். 40 பின்னுதைப்பற்ற பீரங்கி
(17-03-92)

தினர் ஓட்டம் எடுக்க யாழ்ப்பாணக் கோட்டை புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது.

22. 11. 1990-ல் மாங்குளத்தில் இருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்க்கப்பட்டது. இதனால் வன்னிப்பிரதேசத்தின் பெரும்பகுதி சுதந்திர நடமாட்டத்திற்குரிய

நட்புக்கரத்தைப் பற்றிக் கொள்ள சிறிலங்கா அரசு தவறியதால் மீண்டும் யுத்தப் பேரிகைகள் முழங்கின.

இராணுவத் தோல்விகளைச் சந்தித்த சிறிலங்கா அரசும் இராணுவமும் தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்க முனைப்புடன் இருவழிகளைக்


கொடூரச் செயலைக் குறிப்பிடலாம்.

இலங்கைத்தீவில் இரண்டு இராணுவ அமைப்புக்கள் செயற்படுகின்றன. சிங்களவர்களையும் அவர்களுக்குச் சார்பானவர்களையும் சிறிலங்கா இராணுவம் பாதுகாக்க முற்பட்டு நிற்கின்றது. தமிழ் மக்களையும் தமிழீழ தேசத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாத்து நிற்கின்றனர் என்றும் உலக அரங்கிற்கு எடுத்துச்சொன்ன நிகழ்ச்சியாக அமைந்த ஆனையிறவு


இதேவேளை மணலாற்றின் மீது இவ்வருடம் மார்ச்மாத மத்திய பகுதியில் மணலாற்றின் மீது இரண்டாவதுபெரும் படையெடுப்பை இராணுவம் மேற்கொண்டது. இப்படை எடுப்பும் படுதோல்வியில் முடிவுற்றது. டாங்கிகள், கவச வாகனங்கள் உட்பட பல இராணுவ தளபாடங்களை இழந்தது. ஆர். சி. எல் உட்படப் பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இதனிடையே கடற்புலிகள் குடாநாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் பல வெற்றிகரமான தாக்குதலை நடத்தினர். கடற்புலிகளின் இத்தாக்குதல்கள் வடபகுதிக் கடல்களில் சிறிலங்கா கடற்படையின் சுதந்திரமான நடமாட்டத்திற்குக் கடிவாளமிட்டது.

இதேவேளை கடந்த மூன்று மாதங்களுக்குத் தணிந்திருந்த போர், மீண்டும் இம்மாதத்தின் பிற்பகுதியில் இருந்து தீவிரமாகியுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதும், மணலாற்றுப் பகுதியிலும் போர்மேகம் சூழ்ந்துள்ள வேளையில் இரண்டாம் ஆண்டு பூர்த்தியாகின்றது.



முல்லைத்தீவு இராணுவ முகாம் காவலரண் தகர்ப்பின்போது
கைப்பற்றப்பட்ட 50 கலிபா உட்பட ஒரு தொகுதி ஆயுதங்கள்
(10-02-92)



கட்டைக்காடு சண்டையில்
கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

ஈழநாதம்

பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கண்டெடுக்கப்பட்ட பிரயாணபொதி ஒன்று ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது இப்பொதிக்கு உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளுடன் வந்து சமர்ப்பித்து இப்பொதியை பெற்றுக் கொள்ளவும்.

# குடா நாட்டிற்குள் நாசகார வேலை
# தமிழ்க் குழுக்கள் ஈடுபடுத்தப்படுவர்

(கொழும்பு)

சிறிலங்கா அரசுடன் ஒத்துழைக்கும் தமிழ்க் குழுக்களை யாழ். குடா நாட்டினுள் நடைபெறும் இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்துவதென்றும், யாழ்ப்பாண குடா நாட்டுக்குள் ஊடுருவி நாசகார வேலைகளைச் செய்வதற்கு ஈடுபடுத்துவதென்றும், சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் உயர் மட்டத்தில் தீர்மானித்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. இதற்காக விரைவில் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு இக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

1990 ஜூன்முதல், புளொட் ரெலோ, ஈ.பி.டி.பி. குழுக்கள் புலிகளுக்கு எதிரான சிறிலங்கா அரசின் யுத்த நடவடிக்கைகளில் அரசிற்கு ஆதரவாக இயங்கி வருகின்றன. ஆனால் வன்னி, கிழக்கு மாகாணம் மற்றும் யாழ். குடா நாட்டிற்கு மேற்கிலுள்ள தீவுப் பகுதிகளில் மட்டுமே இக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தற்போது இவர்களை குடா நாட்டிலும் பயன்படுத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## ராணுவ உயர் பீடம் முடிவு

யாழ்ப்பாண குடா நாட்டிற்கு தமிழ்க் குழுக்களை அனுப்புவதென்றமுடிவை அடுத்து இக்குழுக்களுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் ஈடுபடுவதற்கென தமது உறுப்பினர்களை இந்தியாவில் இருந்து புளொட் குழு கொழும்பிற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

# தமிழ்மக்களை ஒடுக்கும் அணுகுமுறையை கைவிடுக
## -சிங்களவருக்கு புத்திமதி

(கொழும்பு)

1956 முதல் கடைப்பிடிக்கப் பட்டுவரும் தமிழ் மக்களை ஒதுக்கும் அணுகுமுறையை கைவிட்டு இனப்பிரச்சினைக்கு பயனுள்ள தீர்வு ஒன்றைக் காண்பது பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று சண்டே டைம்ஸ் தனது ஆசிரிய பகுதியில் குறிப்பிட்டு உள்ளது. அதில் மேலும் பண்டா-செல்வா உடன்படிக்கை, டட்லி-செல்வா உடன்படிக்கை, இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பன தோல்வியைத் தழுவியதில் தமக்குள்ள பங்கை சிங்களவர்கள் புரிந்து கொள்வதன் வாயிலாகதொடர்ந்துஇரத்தம் சிந்தப்படுதலை தவிர்க்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புலிகள்-அரசுபேசவேண்டும்
## - பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர்

(கொழும்பு)

சிறிலங்காவின் இனப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கையினால் மாத்திரம் தீர்க்க முடியாதுஎன்று பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜோன் பீல்ட் தெரிவித்தார். விடுதலைப் புலிகளும், அரசும் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குஒரு சமாதானத் தீர்வை எட்டுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றில், சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழு [illegible] இச் செயலாற்றி அனுகூலமான முடிவுகளை எடுக்க உதவ வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்

1991 இல் உள்ளூர் ஆட்சித் தேர்தலில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் உயர்ஸ்தானிகர் டேவிட்கிலாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்ட பிறகு ஜோன் பீல்ட் உயர் ஸ்தானிகர் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீர்கொழும்பு பகுதியில் 5 தமிழ் இளைஞர் கைது

# யாழ். குடா கடலில் கடற்படை ரோந்து

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவும் நேற்றுக் காலையிலும் சிறிலங்கா கடற்படையின் பல விசைப் படகுகள் குடாக்கடல் பிரதேசத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மண்டைதீவில் இருந்து வந்து பாசையூரில் தஞ்சமடைந்திருந்தவரும், கடந்த ஞாயிறன்று கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்

# மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு ஏராளமானோர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு, புளியந்தீவுப் பகுதியைச்சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் ஆயிரக்கணக்கான பொதுமக்களைப் பிடித்துச்சென்று விசாரணை செய்துள்ளனர்

கடந்த ஏழாம் திகதி இப் பகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் மூன்றரை மணித்தியாலங்களாகக் கடும் தேடுதலை மேற்கொண்டனர்.

வீடுவீடாகச் சென்று சோதனையிட்ட இவர்கள் ஆண்களையும், திருமணமாகாத பெண்களையும் ஆனைப்பந்தி ஆலயம் உட்பட பல இடங்களுக்குச் செல்லுமாறு கூறினர்.

தனியார் கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவ மாணவியர், வீதியால் சென்றபோது மக்கள் உட்பட அனைவரினதும் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டன.

பின்னர் சிலர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டதாகவும், ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கடற்படையால் சுடப்பட்ட
# 2 மீனவர்களின் சடலங்கள் உறவினரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாக்கடலில் வைத்து கடந்த ஏழாம்திகதி சிறிலங்கா கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டுக் கடலில் வீசப்பட்ட குருநகர் மீனவர்இருவரின் சடலங்களும் நேற்றுக் காலை கரை ஒதுங்கின.

யாழ். குடாக்கடல் பரப்பில் கடந்த ஏழாம் திகதி இரவு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை இருவர் உயிரிழந்ததும், இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

நேற்றையதினம் இறந்த இரு மீனவர்களினது சடலங்களும் கல்முனை பத்தவடி கடற்கரையில மிதந்துவந்த வேளை சக மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 7 மணியளவில் ஐயாத்துரை ஜேசுதாஸ் (வயது 22) என்பவரது சடலம் பழுதடைந்த நிலையிலும், 11 மணியளவில் தலையற்றநிலையில் மரியாம்பிள்ளை மரியநாயகம் (வயது 40) என்பவரது சடலமும் கண்டுபிடிக்கப்பட்டன. [ச,க,21,88]

# புலிகள் அழைப்புவிடுத்தால் பேச்சுவார்த்தைக்கு தயார்
## -தொண்டா

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் கடிதம் மூலம் அழைப்புவிடுத்தால் தாம் அதனை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமாகிய எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்
# இராணுவ நடவடிக்கைபற்றி தளபதிகளுடன் ஆராய்வு

யாழ்ப்பாணத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளையும் பற்றி ஆராய்வதற்காக சிறிலங்கா பதில்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜே ஆமரதுங்க, அண்மையில யாழ்ப்பாணத்திற்கு சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பகடுவ கூட்டுப்படைகளின் தளபதி ஹமில்டன் வனசிங்க ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் நேற்று முன்தினம் தீவுப்பகுதிக்கும் விஜயம் செய்தார் காரைநகர் ஆகிய பகுதிகளுக்கும் சென்றனர்.

சிவில நிர்வாக நடவடிக்கைகளை நேரில் அவதானித்து அங்குள்ள மக்களின் தேவைகளை கண்டறியவும் இவர்கள் தீவுப்பகுதிகளுக்குச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## துப்பாக்கிப் பிரயோகம்

(குருநகர்)

நேற்று காலை 8-45 மணியளவில் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தது.

கடந்த சில நாட்களாக இவ்வாறு யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# குமுழமுனை போரில் வீரச் சாவடைந்தோர்





பாராளுமன்றத் தெரிவுக் குழு சிறந்த அமைப்பாகும். ஆனால் இன்று நிலவும் அரசியல் சூழ்நிலை பாராளுமன்றத் தெரிவுக் குழு இறுதியான நடவடிக்கைகளை எடுப்பதைத் தாமதப்படுத்துகின்றன என்றனர்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவை ஊக்குவிப்பதன் மூலம் அது முன்னேற்றத்தை நோக்

# 5 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் ஐந்து வடபகுதி இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இந்த ஐந்து இளைஞர்களில் ஒருவர் சில காலம் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகியவர் என்றும், மற்றவர்கள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளாதவர்கள் என்றும் நீர்கொழும்பு இரகசிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

திஞ்சமடைந்திருந்தவரும், கடந்த ஞாயிறன்று கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவருமான மரியாம்பிள்ளை மரியநாயகம் (வயது 40) என்பவரின் சடலம் உறவினர்களால் தேடப்பட்டு நேற்று (9-6-92) மாலை வரையில் மீட்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் நேற்று முன்தினம் தீவுப்பகுதிக்கும் விஜயம் செய்தார் ஊர்காவற்றுறை.வேலணை.

# முல்லைத்தீவுப் பகுதியில் மக்கள் இடம்பெயர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மணலாறு பகுதிகளில் குடியிருப்புகள் மீது நடாத்தப்படும் விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல்களால் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இத்தாக்குதல்களால் தண்ணீரூற்று முள்ளியவளை ஆகிய கிராமங்களிலிருந்தும் தமிழ் மக்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர்.

மணலாற்று பகுதியில் முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால இடம் பெயர்ந்த மக்கள் தண்ணீரூற்று முள்ளியவளை கிராமங்களில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரேரணை தோல்வி

சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை 50 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. இந்த பிரேரணைக்கு ஆதரவாக 68 உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து 118 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

# சிறிலங்கா கடற்படை தலைமையில் மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையின் தலைமைக் கட்டுப்பாட்டு அமைப்பில் பல மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

கடற்படையின் சீவ் ஒவ் ஸ்ராவ் றியர் அட்மிரல் எவ் என் சியூ விக்கிரமரெட்னா வரும் ஒக்ரோபர் மாதம் 55 வயதில் ஓய்வு பெறவுள்ளார். இவர் ஓய்வைத் தொடர்ந்தே கடற்படைத் தலைமையில் மாற்றங்கள் அறிவிக்கப்படவுள்ளன. கிழக்குக் கடற்பிராந்தியத்தின் தளபதியாகக் கடமையாற்றும் கமடோர் டி. ஏ. எம். ஆர் சமரசேகரா சேவை மூப்பின் அடிப்படையில் இப்பதவிக்கு நியமனம் பெறலாம் எனக்குறிப்பிடப்படுகிறது.

இந்தநியமனத்தைத் தொடர்ந்து கடற்படையில் கமடோர், கப்டன் மட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

# அனுமதி அட்டை பெற்றுக் கொள்க

யாழ் மாவட்டத்தின் கிராமசேவையாளர் பதவிக்கான போட்டிப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று மாலை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன.

இவை இன்று முதல் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மேற்படி பதவிக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 13-ம்திகதி நடைபெறவுள்ளது.

## வீரச்சாவு

வத்துடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப்புலிகளின் போராளி லெப்டினன்ட் வேந்தன் (இல்மன்- வேலாயுதபிள்ளை வரதன், திருவதிகை, வேளாவலை அளவெட்டி) 09-06-1992 அன்று வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## 3 வேங்கைகள்

லிஸ் சேவியர், ஏழாம் வட்டாரம் விடத்தல் தீவு], 2 ஆம் லெப்டினன்ட் உதயச் சந்திரன் [சேது பாண்டித் தேவர் ராமமணி சேரன் மகாதேவர், திருநெல்வேலி] ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கொழும்பு அகதி

அகதிகள் தங்கள் பகுதிகளுக்கு அருகிலே உள்ள அகதி முகாம் களிலேயே தங்கவேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.



[கப்டன் நேசன்



வீரவேங்கை ஜெயகரன்]



வீரவேங்கைசந்திரமதி



வீரவேங்கை காதாம்பரி



வீரவேங்கை குயில்மொழி

08-06-1992 இல் குமுழமுனை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை தடுத்துநிறுத்தி விரட்டியடித்த உக்கிர சண்டையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கைகள்.

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை வரதன்

(இல்மன் / வேந்தன்)

அளவெட்டி வேளாவை வேலாயுதபிள்ளை வரதன் (இல்மன் / வேந்தன்) வீரமரணமானார் அன்னார் திரு. செ. வேலாயுதபிள்ளை (முகாமையாளர் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் வடபிராந்தியம்), திருமதி வனஜலோஜினி வேலாயுதபிள்ளை ஆகியோரின் ஏக புதல்வனும், திருமதி வதசலா - பரமநாதனின் அன்புச் சகோதரனும் திரு. ஆ. பரமநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை யாழ்ப்பாணம்) அவர்களின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (10-06-92) புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக அளவெட்டி மகஜன சபை மண்டபத்தில் வைக்கப்பட்டு நல்லடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

"திருவதிகை"
வேளாவை
அளவெட்டி

தகவல்
செ. வேலாயுதபிள்ளை (தந்தை)
(2654)

# வாகன வரிசை இலக்கம் 09. 06. 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் — 4276

சோதனை நிலையத்தை தாண்டிச்சென்ற இறுதிவாகன இலக்கம் — 3350

இராணுவம் அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம் — 3325

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம் — 24-4726, 27-297, 26-6984. 24-5041, 26-8382, 26-9138, 27 5822, 41-417 , 41-9556, 27-5058, 36-5168, 36-5045, 36-1150, 37-7484, 25-546, 36 7100 36-6872, 36-4610, 36 4144 37-3949, 25-9458, 70-8938, 70-7382

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

28-657. 24-4701. 42-969, 41-9487 26-8419. 41-9791, 24 554 28-4441 28-2342, 41-5417. 41-4719 26-5202, 26 3654. 42 6919 25-9809, 41 8523, 27 6741, 41-5583, 26-673, 26-5143, 27 2088. 27 7050 26-8149 26-1376, 36-5707 25-6900, 37-4563, 25-1946, 25-4381

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது